# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.86/2016 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 04 ( PW- 04 ) |
| பெயர் | :- | ராஜா |
| தேதி | :- | 04-11-2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

சாட்சியம் சொல்ல வாதி அழகேசன் அழைத்தார் என்றால் சரிதான். நான் இன்று இரு வழக்குகளில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இரு வழக்குகளிலும் ஏற்கனே நிருபண ஆணையுறுதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரு வழக்குகளிலும் என்ன என்ன சொத்துக்கள் உள்ளன என்ன என்ன நிவாரணங்கள் கோரப்பட்டுள்ளன என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் நிருபண ஆணையுறுதியில் குறிப்பிட்டுள்ள முகவரியில்தான் வசிக்கிறேன் என்று காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சுப்புலட்சுமி, கலா, சாந்தா ஆகிய மூவரும் ஒன்றாக வசிக்கின்றனர் என்றால் சரிதான். அழகேசன் தனியாக வசிக்கிறார் என்றால் சரிதான். அழகேசன் குடியிருக்கும் வீடு எந்த புல எண்ணில் உள்ளது என்று எனக்குத் தெரியாது. சுப்புலட்சுமி, கலா, சாந்தா ஆகிய மூவரும் குடியிருக்கும் வீடு எந்த புல எண்ணில் உள்ளது என்று எனக்குத் தெரியாது.

சித்தையபண்டாரம் எந்த புல எண்ணில் எப்போது எவ்வளவு நிலம் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சுப்புலட்சுமி பெயரில் எப்போது சொத்து வாங்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. சித்தையபண்டாரம் அழகேசனுக்கு எப்போது எந்த புல எண்ணில் அடங்கிய சொத்தை பொறுத்து அறுதியாவணம் எழுதி வைத்தார் என்று குறிப்பிட்டு எனக்குத் தெரியாது.

நான் நிருபண ஆணையுறுதியில் சொன்ன முகவரியில் 37 ஆண்டுகளாக வசிக்கவில்லை என்றும் இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் அழகேசன் சொல்லி கொடுத்ததுபோல் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.